**மோட்டார் வாகன விபத்துக்கள் கோரிக்கைத் தீர்ப்பாயம்,**
**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**முன்னிலை : திருமதி.கு.புவனேஸ்வரி, பி.எல்.,**
**மோட்டார் வாகன விபத்துக்கள் கோரிக்கை தீர்ப்பாயர்,**
**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**2025 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15 ஆம் நாள் புதன்கிழமை**

**இ.ம.எண்.1/2023 ன் எம்.சி.ஓ.பி. எண்.345/2014**

L.அருள்மொழி

... மனுதாரர் /3 வது உத்தேச தரப்பினர்

..எதிர்..

1. B. ஆரோக்கிய மேரி @ ஹெலன்,
2. B. ஜோசப்,
3. B. ரீகன்,
4. B. மரியா,
5. B. மணிமேகலை,
6. B. எட்வின்,
7. B. பிரியா

... எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள்

**–எதிர்–**

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.10.17 22:00:11 +0530

1. லட்சுமணன்,

2. பஜாஜ் அலையன்ஸ் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிட்டெட்

... எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்

இம்மனு 26.09.2025 அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் /3 வது உத்தேச தரப்பினர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. P. ஆனந்தராஜா மற்றும் S. விஜயா ஆகியோர் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள் தரப்பில் S. சுரேஷ் குமார், S. பாலாஜி, R.காஞ்சனா, M.அர்ச்சனா, T.S.மங்கையர்கரசி, V.சுசித்திரா, மற்றும் R.சத்திய சீலன் ஆகியோர் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர்/ 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் R. நந்தகுமார் மற்றும் D. மனோரஞ்சிதம் ஆகியோர் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் எதிர்மனுதாரர் அழைத்தும் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலும் இருந்து வந்ததில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.10.17 22:00:17 +0530

**<u>உத்தரவு</u>**

இம்மனு உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை 1 (R) விதி 10 (2) ன் கீழ் மனுதாரர் /3 வது உத்தேச தரப்பிரை எம்.சி.ஓ.பி–ல் 3 வது மனுதாரராக சேர்க்க உத்தரவிட கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர்/3 வது உத்தேச தரப்பினர் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்:–</u>**

14.04.2013 ஆம் தேதி இரவு சுமார் 9:30 மணியளவில், மனுதாரரின் கணவர், லக்ஷ்மணன், தனது நண்பர்களுடன் TN–18–M–7567 என்ற எண் கொண்ட காரை ஈ.சி.ஆர் பரமாக்னட்டிக் அருகே ஓட்டிக் கொண்டிருக்கையில், TDI–9319 என்ற பதிவு எண்ணுள்ள ஒரு லாரி, எந்த சமிக்ஞையும் எச்சரிக்கை விளக்குகளும் இல்லாமல், நடு பிரிவுக்கு (Centre Median) அருகில் கவனக்குறைவாக நிறுத்தப்பட்டிருந்ததால், மோசமான தெரியாமை காரணமாக, கார் அந்த லாரியை மோதியது. இதனால் லக்ஷ்மணன் கடும் காயங்கள் அடைந்து, பின்னர் 10.08.2013 அன்று இறந்தார். காரில் பயணிக்காத ரீகன் என்பவரால் ஒரு புகார் தாக்கல் செய்யப்பட்டு, முதல் தகவல் அறிக்கை (FIR) எண். 71/2013 பதிவு செய்யப்பட்டது. மனுதாரர், லாரி உரிமையாளர் பி. தணிகாசலம் மற்றும்

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.10.17 22:00:22 +0530

நேஷனல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட் ஆகியோர் மீது சென்னை சிறப்பு நீதிமன்றத்தில் MCOP எண்.5379/2013 தாக்கல் செய்தனர். 18.07.2023 அன்று நீதிமன்றம், காப்பீட்டு நிறுவனம் இழப்பீட்டுத் தொகை செலுத்த வேண்டும் என உத்தரவிட்டது.

இறந்தவர் ஒரு மறுவாழ்வு மையத்தை நடத்தி வந்தார், இது தற்போது மனுதாரரால் நிர்வகிக்கப்படுகிறது. ஒரு ஊழியர், சரண்ராஜ் (RW.1), 25.09.2023 அன்று, நீதிமன்ற அழைப்பாணை மூலம் வந்து சாட்சியமளித்த போது தான் இறந்து போன அவரது கணவர் மீது தாக்கல் செய்யப்பட்ட இந்த MCOP எண்.345/2014 பற்றி மனுதாரர் அறிந்தார். இந்த வழக்கு எந்த அறிவிப்பும் இல்லாமல் 20.09.2018 அன்று ஒரு தரப்பு (exparte) உத்தரவாகி இருந்தது. MCOP எண். 345/2014 தாக்கல் செய்யப்பட்ட போது, அவரது கணவர் ஏற்கனவே இறந்துவிட்டதாலும், மனுதாரர் தனது வசிப்பிடத்தை மாற்றியதாலும், இழப்பு மற்றும் சிரமத்தை தவிர்ப்பதற்காக, அசல் மனுவில் மூன்றாவது எதிர்மனுதாரராக சேர்க்கப்பட வேண்டும்.

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.10.17 22:00:27 +0530

**3. 3 வது எதிர்மனுதாரர்/3 வது மனுதாரர் தாக்கல் செய்து 1 முதல் 2 மற்றும் 4 முதல் 7 எதிர்மனுதாரர்கள் / மனுதாரர்கள் ஏற்றுக் கொண்ட எதிருரையின் சுருக்கம்:—**

இறந்து போன முதல் எதிர்மனுதாரர் திரு. லக்ஷ்மணனின் ஒரே சட்டபூர்வ வாரிசு என நிரூபிக்க, மனுதாரர் எந்தவொரு சட்டபூர்வ வாரிசு சான்றிதழையும் சமர்ப்பிக்கவில்லை. மனுதாரர் திருமதி. அருள்மொழி என்பவருடன், மற்ற சட்டபூர்வ வாரிசுகளான சிறுவர் திவ்யா, ஜி. ஈஸ்வரி மற்றும் தேஜஸ்வின் ஆகியோரும் உள்ளனர். எனவே, இந்த மனு தேவையான தரப்பினரை சேர்க்காத குறைபாட்டால் பாதிக்கப்படுகிறது. குற்ற எண்.71/2013 (E5 கூவத்தூர் காவல் நிலையம்)ல் உள்ள முதல் தகவல் அறிக்கையின்படி, விபத்து TN–18–N–7567 என்ற வாகனத்தினாலேயே ஏற்பட்டது, இது இறந்து போன லக்ஷ்மணனாலேயே ஓட்டப்பட்டது, மேலும் அவர் குற்றம் சாட்டப்பட்டவராக இருந்தார். இருப்பினும், மனுதாரரும் பிற வாரிசுகளும், உண்மைகளை தவறாக வெளியிட்டும், முதல் தகவல் அறிக்கை மற்றும் காவல்துறை விசாரணையை மறைத்தும், ஒரு லாரி (பதிவு எண். TDI–9319) மீது MCOP எண். 5379/2013 ஐ தாக்கல் செய்து, தங்கள் சார்பாக ஒரு ஈட்டுத் தொகை

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.10.17 22:00:31 +0530

உத்தரவைப் பெற்றனர். எனவே மனுவைப் பரிசீலிக்கும் முன், I.A. எண். 1/2023–ல் இறந்த லக்ஷ்மணனின் பிற சட்டபூர்வ வாரிசுகளை மனுதாரர் சேர்த்துக் கொள்ளும்படி நீதிமன்றம் உத்தரவிட வேண்டும்.

4. <u>தீர்வு செய்யப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்</u>:–

இந்த மனு மனுதாரரால் கோரப்படும் பரிகாரம் அனுமதிக்கக் கூடியதா? என்பதாகும்.

5. இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

6. <u>பிரச்சனை:–</u>

இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. அசல் எம்.சி.ஓ.பி–ல் மனுவை இம்மனுவின் 1வது எதிர்மனுதாரர் 14.04.2013 அன்று மோட்டார் வாகன விபத்தில் இறந்து போன தன் கணவருக்கான இழப்பீட்டுப் பரிகாரம் கோரி தாக்கல் செய்து மனுவில் திருத்தங்கள் மேற்கொள்வதற்காக நிலுவையில் உள்ளது. இந்நிலையில் இந்த மனுதாரரான உத்தேச தரப்பினரின் கணவர் லட்சுமணன் 14.04.2013 ஆம் தேதி மாலை சுமார் 9:30 மணியளவில் ஏற்பட்ட விபத்தில் இறந்துவிட்டதாகவும் அவர் தனது நண்பர்களுடன் TN–18–M–7567 என்ற

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.10.17 22:00:36 +0530

எண் கொண்ட காரை ஈ.சி.ஆர் பரமாக்னட்டிக் அருகே ஓட்டிக் கொண்டிருக்கையில், TDI–9319 என்ற பதிவு எண்ணுள்ள ஒரு லாரி, எந்த சமிக்ஞையும் எச்சரிக்கை விளக்குகளும் இல்லாமல், கவனக்குறைவாக நிறுத்தப்பட்டிருந்ததால், மோசமான தெரியாமை காரணமாக, கார் அந்த லாரியை மோதியதில் லக்ஷ்மணன் கடும் காயங்கள் அடைந்து, பின்னர் 10.08.2013 அன்று இறந்துவிட்டதாகவும் காரில் பயணிக்காத ரீகன் என்பவரால் ஒரு புகார் தாக்கல் செய்யப்பட்டு, முதல் தகவல் அறிக்கை (FIR) எண்.71/2013 பதிவு செய்யப்பட்டதாகவும் உத்தேச மனுதாரர், லாரி உரிமையாளர் பி. தாணிகாசலம் மற்றும் நேஷனல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட் ஆகியோர் மீது சென்னை சிறப்பு நீதிமன்றத்தில் MCOP எண்.5379/2013 தாக்கல் செய்து 18.07.2023 அன்று நீதிமன்றம், காப்பீட்டு நிறுவனம் இழப்பீட்டுத் தொகை செலுத்த வேண்டும் என உத்தரவிட்டதாகவும், அசல் மனுவில் சரண்ராஜ் (RW.1), 25.09.2023 அன்று, நீதிமன்ற அழைப்பாணை மூலம் சாட்சியமளித்த போது தான், இறந்து போன அவரது கணவர் மீது தாக்கல் செய்யப்பட்ட அசல் MCOP எண்.345/2014 பற்றி மனுதாரருக்கு தெரிய வந்ததாகவும், இந்த வழக்கு எந்த அறிவிப்பும் இல்லாமல் 20.09.2018 அன்று ஒரு தரப்பு (exparte)

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.10.17 22:00:40 +0530

உத்தரவாகி இருந்ததாகவும் MCOP எண்.345/2014 தாக்கல் செய்யப்பட்ட போது, மனுதாரரின் கணவர் ஏற்கனவே இறந்துவிட்டதாலும், மனுதாரர் தனது வசிப்பிடத்தை மாற்றியதாலும், இழப்பு மற்றும் சிரமத்தை தவிர்ப்பதற்காக, குறிப்பிட்ட வழக்கில் மூன்றாவது பிரதிவாதியாக சேர்க்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளதைப் பொருத்து எதிர்மனுதாரர்கள் / மனுதாரர்கள் தரப்பில் இறந்து போன முதல் எதிர்மனுதாரர் திரு. லக்ஷ்மணனின் ஒரே சட்டபூர்வ வாரிசு என நிரூபிக்க, மனுதாரர் எந்தவொரு சட்டபூர்வ வாரிசு சான்றிதழையும் சமர்ப்பிக்கவில்லை என்றும் மனுதாரர் திருமதி. அருள்மொழி என்பவருடன், மற்ற சட்டபூர்வ வாரிசுகளான சிறுவர் திவ்யா, ஜி. ஈஸ்வரி மற்றும் தேஜஸ்வின் ஆகியோரும் உள்ளதாகவும் எனவே, இந்த மனு தேவையான தரப்பினரை சேர்க்காத குறைபாட்டால் பாதிக்கப்படுவதாகவும், மனுவைப் பரிசீலிக்கும் முன், I.A. எண். 1/2023–ல் இறந்த லக்ஷ்மணனின் பிற சட்டபூர்வ வாரிசுகளையும் மனுதாரர் சேர்க்க உத்தரவிட வேண்டும் என்றும் ஆப்சேபணை செய்யப்பட்டுள்ள போதிலும் இம்மனுவின் மனுதாரரான உத்தேச தரப்பினர் அசல் மனுவின் 1ம் எதிர்மனுதாரரின் மனைவி என்கிற நிலையில் தனது கணவர் இறந்துவிட்டதால் அசல்

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.10.17 22:00:45 +0530

மனுவில் எதிர்வாதம் செய்யும் பொருட்டு தன்னை தரப்பினராக சேர்க்க கோரியுள்ள நிலையில் அவரது குழந்தைகளை தரப்பினராக சேர்க்கவில்லை என்பதால் பாதகம் ஏதும் இல்லை என்றும் எனவே மோட்டார் வாகன இழப்பீட்டு மனுவில் (எம்.சி.ஓ.பி.) முழுமையான தீர்வு காணும் பொருட்டும் நீதியின் நலன் கருதியும் இம்மனுவை அனுமதிப்பது என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவில், இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினிமயமாக்கப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 15 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.10.17 22:00:49 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**<u>இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>– இல்லை**

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.10.17 22:00:53 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**<u>வரைவு/தெளிவு உத்தரவு</u>**
**இ.ம.எண்.1/2023 ன்**
**எம்.சி.ஓ.பி. எண்.345/2014**
**நாள் 15.10.2025**
**2 வது கூ.மா.அ.நீ., பூந்தமல்லி.**